SOND

SOND Better World Movement

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk

web:-www.sond.lk

Face book:- Social Organizations Networking for Development - (SOND)

# மாதாந்த அறிக்கை

ஆனி, 2014

## Social Organizations Networking for Development

**RKM Road**
**Akkaraipattu**

**No. 19, Saravana Road**
**Kallady Batticaloa.**

**60" Arasady Road**
**Jaffna.**

## இதழின் உள்ளே

1. அம்பாறை
2. யாழ்
3. மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

**"We all will Create a Better World"**

SOND

## விவசாயப்பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் SOND அமைப்பினால் 11 ஏக்கர் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது இப் பண்ணையில் தென்னை,வாழை,மரக்கறி பயிரினங்கள் நடுகை பண்ணப்பட்டு மக்களிற்கு விற்பனைக்காக வழங்கப்படுகின்றது.







## உறவினைக் கட்டியெழுப்புதல் பயிற்சி

SOND அமைப்பினால் அம்பாறை மாவட்டத்தில் செயற்படும் கிராம மட்ட அமைப்புக்களுக்கான உறவுகளைக் கட்டியெழுப்பும் பயிற்சி 2014.06.16 ல் அக்கரைப்பற்று SOND பயிற்சி நிலையத்தில் வளவாளர் திரு.தயாபரன் அவர்களினால் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியில் 7 நிறுவனத்தில் இருந்து 34 பிரதிநிதிகள் பங்குபற்றி பயனடைந்தார்கள்.





**"We all will Create a Better World"**

# நிதியின்றிய செயற்திட்டம்

அரச சார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்ற நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு கடந்த 2011.மார்ச் மாதம் தொடக்கம் தற்போது வரை சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு,அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் ,முஸ்லீம்,சிங்கள இனத்தினைச் சேர்ந்த 25 ஆண்,29 பெண் உள்ளடங்கலாக 54 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

இம் மாதம் சிறுவர்களினால் நான்கு நடமாடும் நூலகசேவை மேற் கொள்ளப்பட்டது. இதன் போது 201 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இருபக்கங்களுக் பாவித்த A4 பேப்பரினால் 215 குழுசைப் பைகள் சிறுவரினால் தயாரிக்கப்பட்டுள்ளது

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

. சிறுவர்களின் ஓய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கரன்வோட்,கிரிக்கெட் வெட், ஸ்பிங் ஆகிய மூன்று வகையான விளையாட்டுப்பொருள்கள் 05 தடவைகள் வழங்கப்பட்டது.

. சிறுவர்களுக்கு 5 திரைப்படக்காட்சிகாண்பிக்கப்பட்டுள்ளது. இதில் 69 பேர் கலந்துகொண்டுள்ளார்கள்.





SOND

## வளநிலையப் பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனைஅதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர்,நிறுவனப் பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 9 தலைப்பில் 218 புத்தகங்களைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## சுய முன்னேற்றப் பயிற்சி

07.06.2014 சனிக்கிழமை மொழிகள் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கான சுய முன்னேற்றப் பயிற்சி நெறி எமது ஞுழுனுே அலுவலகத்தில் நிறுவனத்தின் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களால் நடாத்தப்பட்டது. இதில் தெல்லிப்பளை, கோப்பாய், வேலணை, ஊர்காவற்துறை, பூனகரி, பளை பிரதேசங்களை சேர்ந்த இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

## உறவுகளைக் கட்டியெழுப்புதல்

17.06.2014 மொழிகள் திட்டத்தின் கீழ் "உறவுகளைக் கட்டியெழுப்புதல்" என்னும் தலைப்பில் கிராம மட்ட அமைப்புக்களுக்கான பயிற்சி நெறி உளவள துணையாளரும் யாழ் பல்கலைக்கழக உளவள துணை விரிவுரையாளருமான அருட்தந்தை. இ.ஸ்ரலின் அவர்களால் SOND அலுவலகத்தில் நடைபெற்றது.இப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கு எமது நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட சில பயனுள்ள நூல்கள் வழங்கப்பட்டது.



**"We all will Create a Better World"**

SOND

## விவசாயப்பண்ணை

19.06.2014 வியாழக்கிழமை அன்று **Swiss Development Corporation** திட்டத்தின் கீழ் வல்லை பிரதேசத்தில் புதிதாக விவசாயப்பண்ணை அமைப்பதற்கான கால் கோள் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.



**"We all will Create a Better World"**

SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## காலநிலை மாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental Protection)

காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளில் காலநிலை மாற்ற செயற்பாட்டுக் குழுவினது 2வது அமர்வானது 2014.06.24 ம் திகதி நடாத்தப்பட்டது. இதில் துறைசார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் 20 பேரை உள்ளடக்கியதாக நடைபெற்றது. இதன் போது இக்குழுவினது நோக்கம் பற்றியும் எமது பகுதியில் காலநிலை மாற்றத்தை அதிகரிக்கும் முகமாக நடைபெற்று வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

**“We all will Create a Better World”**